Registered as a Newspaper

போட்டோ ஸ்ராட் பிரதிகள் எடுத்துக் கொடுக்கப்படும்
நாடுங்கள்
ராஜ் கொமியுனிகேஷன் சென்றர்
கோண்டாவில் சந்தி, கோண்டாவில் கிழக்கு.
மாணவருக்கு விசேஷ சலுகை உண்டு.

உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை: ரூ. 1.25

பாஸ்போர்ட், லொன், விசா துரிதமாகவும் எடுத்துக் கொடுக்கப்படும்.
நாடுங்கள்
ராஜ் கொமியுனிகேஷன் சென்றர்
கோண்டாவில் சந்தி, கோண்டாவில் கிழக்கு.

கடகம் 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு பங்குனி மீ 1 உ ஞாயிற்றுக்கிழமை திதி 1407 றஜப் பிறை 14 (15.03.1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY இல: 92

ராஜீவிடம் இருந்து புதிதாக விசேட செய்தி

சிறப்புத்தூதர் தினேஷ்சிங் ஜே. ஆரிடம் ஒப்படைப்பு

கொழும்பு, மார்ச் 15

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் விசேட செய்தியுடன் சிறப்புத்தூதர் திரு. தினேஷ்சிங் நேற்றுப் பிற்பகல் கொழும்பு வந்து சேர்ந்தார்.

பிரஸ்தாப விசேட செய்தியை நேற்று மாலை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிடம் திரு. தினேஷ்சிங் கையளித்தார்.

விசேட விமானம் மூலம் நேற்றுப் பிற்பகல் கட்டுநாயக்கா விமான நிலையம் வந்தடைந்த திரு. தினேஷ்சிங்கை இந்தியத்தூதர் திரு. டிக்ஸிற் வரவேற்று அழைத்துச் சென்றார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்கு மத்திய அதிகாரத்தைத் தொடரும் வாய்ப்பு இன்னும் இருக்கிறதா? என்பதைக் கண்டறிவதற்காகவே திரு. தினேஷ்சிங்கை, சிறப்புத் தூதராக இந்திய அரசு அனுப்பி வைத்திருக்கின்றது என்று பி. பி. சி வானொலி நேற்று இரவு அறிவித்தது.

இந்திரா காந்தி பதவிக் காலத்தில் திரு. தினேஷ்சிங் வெளியுறவு அமைச்சராகப் பதவி வகித்தவர். தற்சமயம் இந்திரா காங்கிரஸ் எம்.பி யாக இருக்கிறார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு பிரதமர் காந்தி அனுப்பியுள்ள விசேட செய்தியுடன் திரு. தினேஷ்சிங் வந்திருக்கிறார்.

விசேட செய்தியை நேற்று மாலை, ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிடம் கையளித்தார்.

திரு. தினேஷ்சிங் இன்று திரு. ஜெயவர்த்தனாவிடம் விரிவாகப் பேசுவார் என அறியப்படுகிறது.

பின்னர் முத்த அமைச்சர்களுடனும் திரு. தினேஷ்சிங் பேச்சுக்கள் நடத்துவார்.

அதன் பின்னர் இனப் பிரச்சினைப் பேச்சுக்கள் குறித்து இலங்கைத் தலைவர்கள் என்ன கருதுகின்றனர் என்ற தனது கணிப்பை திரு. தினேஷ்சிங் பிரதமர் ராஜீவ் காந்திக்குத் தெரிவிப்பார்.

இப்படிப் புதுடில்லி (4 ஆம் பக்கம் பார்க்க)

வார்த்தாசாரதி, யன்டாரி, சிதம்பரம் என்போர் இப்ப தினேஷ்சிங் வந்திருக்கிறார். அப்ப உதுதான் மாற்றிற வேலையாய் இருக்கிறதே ஒழிய உருப்படியாய்க் காரியம் நடக்கிறதாய் இல்லை... நம்பிக்கையும் இல்லாத நிலைதான்.....!

இடம் பெயர்ந்தோர் தமது வீடுகளை பார்வையிட ஏற்பாடு

காங்கேசன்துறை, மார்ச் 15

கட்டுவன் பகுதியில் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட வீடுகளை அதன் சொந்தக்காரர்கள் நாளை காலை 10 மணிக்கு நேரில் பார்வையிட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 28ஆம் திகதி அன்று ஏற்பட்ட வன்செயல்களால் அப்பகுதியில் குடியிருந்த மக்கள் வீடுகள், உடைமைகளை விட்டு வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்தனர்.

கட்டுவன் சந்தியைச் சுற்றியுள்ள பகுதியிலும், மயிலிட்டி தெற்கு ஞானோதயா வித்தியாசாலை சுற்றுடலிலும் வசித்த 50 குடும்பங்கள் தமது வீடுகளை நேரில் பார்வையிட்டு தாம் விட்டுச் சென்ற அத்தியாவசிய பொருட்களை எடுத்து வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வலி. வடக்கு பிரதேச சபை குழு ஒன்றியமும், அரச அதிகாரிகளும், இராணுவத்துடன் தொடர்பு கொண்டு இதற்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை கட்டுவன் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து இடம் பெயர்ந்த 750 குடும்பங்களுக்கும் அடுத்த வார இறுதியில் நிவாரண உணவுப் பொருள்கள் வழங்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ-68)

தமிழ் இளைஞர்கள் கொழும்பில் கைது!

கொழும்பு, மார்ச் 15

கொழும்பு மாநகரில் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவது அதிகரித்துள்ளது.

தமிழ் மக்கள் அதிகமாக வாழும் கொட்டாஞ்சேனை, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை ஆகிய இடங்களில் இரவு நேரங்களில் செல்லும் தமிழ் இளைஞர்கள் பொலீஸாரினால் தடுத்து நிறுத்தப்பட்டு விசாரணை செய்யப்படுகின்றனர்.

காலை நேரங்களில் அரச அலுவலகங்களுக்கு பணியாற்றச் செல்லும் தமிழ் இளைஞர்களும் பொலீஸ் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு தீவிரவிசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர். (உ-எ)

பயங்கரவாதச் செயல்கள் தொடர்பாக

மாலைதீவில் எவரும் தடுத்து வைக்கப்படவில்லை

தூதரகம் அறிக்கை

கொழும்பு, மார்ச் 15

மாலைதீவில் இலங்கைப் பிரசைகள் எவரும் பயங்கரவாதச் செயல்கள் தொடர்பாக தடுத்து வைக்கப்பட்டிருக்கவில்லை

கொழும்பில் உள்ள மாலைதீவு தூதரகம் விடுத்த அறிக்கையில் முன்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தீவிரவாதிகள் சிலர் மாலைதீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று கொழும்பில் வெகுஜன தொடர்பு நிலையம் முன்னர் தெரிவித்து இருந்தது.

இதற்குப் பதிலளிக்கு முகமாகவே மாலைதீவுத் தூதரகம் அறிக்கையை விடுத்தது.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் மாலைதீவு விஜயத்துக்கு முன்னோடியாக மாலைதீவில் உள்ள இலங்கைப் பிரசைகள் சிலரை பாதுகாப்புப்படையினர் விசாரணை செய்தனர்.

அவர்களில் ஒருவராவது தீவிரவாத இயக்கங்களுடன் தொடர்பு கொண்டிருக்கவில்லை. அதனால் விசாரணையின் பின்னர் அனைவரும் விடுவிக்கப்பட்டு விட்டனர்–

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது (இ-எ)

சுபநேரம்

15—03—1987
ஞாயிற்றுக்கிழமை
சுப நேரம்:
9-21 முதல் 10-51 வரை
ராகுகாலம்:
4-51 முதல் 6-21 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும் பூரண விரதம்

கிளிநொச்சிக்கு மேலும் எரிபொருள்

3 பௌசர்களில் வருகின்றது

யாழ்ப்பாணம், மார்ச் 15

நேற்றும் இராணுவப் பாதுகாப்புடன் மூன்று பௌசர்களில் கிளிநொச்சிக்கு எரிபொருள் எடுத்துவரப்பட்டது.

அனுராதபுரத்திலிருந்து கொண்டு வரப்பட்ட எரிபொருள் பௌசர்களுக்கு மாங்குளத்தில் இருந்து இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டன.

நூற்றுக்கும் அதிகமான சிப்பாய்கள் வீதி போராக்களில் உள்ள காட்டுப்பாதைகளூடாக நடந்து வர பௌசர்களும், கவச வாகனங்களும் வீதியால் மெதுவாகச் சென்றன.

நேற்று முன்தினமும் 3 பௌசர்களில் கிளிநொச்சிக்கு எரிபொருள் எடுத்து வரப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கிளிநொச்சியில் நற்பொருமுத மடீசலும் மண்ணெண்ணையும் போதுமான அளவு விநியோகிக்கப்பட்டு வருவதாக தெரிவருகிறது. (உ-10)

ஐ. நா. தீர்மானம் இலங்கை அரசுக்கு முதலாவது எச்சரிக்கை

இந்தியா சொல்கிறது

லண்டன், மார்ச் 14

ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழு இலங்கைக்கு எதிராக நிறைவேற்றிய தீர்மானம் இலங்கை அரசுக்கு விடுக்கப்பட்ட முதலாவது எச்சரிக்கை.

இப்படி இந்தியா கூறியுள்ளது என்று பி. பி. சி. வானொலி நேற்று அறிவித்தது.

ஆர்ஜன்ரீனாவின் பிரேரணை எல்லா நாடுகளும் ஒப்புக்கொள்ளக் கூடிய வகையில் திருத்தப்பட்டது தங்களுக்கு கிடைத்த இராஜதந்திர வெற்றி என்று இலங்கை கூறுகிறது.

ஆனால் ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுவின் தீர்மானம் இலங்கை அரசின் நடவடிக்கைகளை, கடுமையாக விமர்சித்துள்ளது.

இப்படி பி. பி. சி. மேலும் அறிவித்தது. (இ-எ)

முருகண்டியில் கண்ணிவெடி!

யாழ்ப்பாணம், மார்ச் 15

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் எனக் கூறப்படும் முருகண்டிக்கும் 155ஆம் கட்டைக்கும் இடையில் விடுதலைப் போராளிகள் இராணுவவாகனம் மீது கண்ணிவெடித் தாக்குதல் நடத்தினர்.

நேற்று முன்தினம் பிற்பகல் இரண்டு மணி அளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

கிளிநொச்சி நோக்கிச் சென்று கொண்டிருந்த இராணுவ வாகனம்மீதே இத்தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

எனினும் இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேதம் பற்றி எதுவும் தெரியவில்லை. (உ-10)

கூட்டணி கண்டனம்!

உலகக் கருத்தை மறைக்க முயல்கிறது இலங்கை அரசு

சென்னை, மார்ச் 15

உலகக் கருத்தை முடி மறைக்கும் முயற்சியில் இலங்கை அரசு தொடர்ந்தீடுபடுவதாக தமிழர் விடுதலைக் கூட்டணி கண்டனம் தெரிவித்து உள்ளது.

கூட்டணியின் அரசியற் குழு நேற்றுக் கூடி, இலங்கைத் தமிழர் நிலை குறித்து ஆராய்ந்தது.

அதன் பின்னரே மேற்கண்ட கண்டனத்தை வெளியிட்டது.

யாழ் குடா மீதான பொருளாதார முற்றுகையை பூரணமாக விலக்கிக்கொள்ள வேண்டும் என்ற இந்தியாவின் கோரிக்கையை இலங்கை அரசு உதாசீனம் செய்து விட்டது.

தனது இராணுவ அடக்குமுறைக் குறித்த உலகம் கொண்டுள்ள கருத்தை முடி மறைக்கும் முயற்சியில் தான் இலங்கை அரசு ஈடுபடுகிறது.

— இப்படி கூட்டணி மேலும் தெரிவித்துள்ளது. (உ-எ)

காங்கேசன்துறையில் 3 சிப்பாய்கள் பலி; 5 பேர் காயம்

பலாலி, மார்ச் 15

காங்கேசன்துறை ஹாபர்வியூ இராணுவ முகாமில் இருந்து பலாலி நோக்கி சென்று கொண்டிருந்த இராணுவ வண்டிகள் மீது விடுதலைப் புலிகள் நேற்று தாக்குதல் நடத்தினர்.

இதன் காரணமாக மூன்று சிப்பாய்கள் கொல்லப்பட்டதாகவும்– ஐந்து சிப்பாய்கள் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது

சிப்பாய்களின் பதில் தாக்குதலில் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டார். பலர் காயமடைந்தனர்.

நேற்றுப்பகல் 11 மணி அளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

காங்கேசன்துறை ஹாபர்வியூ இராணுவ முகாமில் இருந்து உணவுப் பொருட்களை ஏற்றிய இராணுவ லொறிகளும் கவச வாகனங்களும் இராணுவத்தினருடன் பலாலி நோக்கி சென்று கொண்டிருந்தன.

காங்கேசன்துறை சங்கிலியன் பகுதியை வண்டிகள் தொடர்ந்து சென்றபோது அங்குள்ள சற்குணியலிங்கம் விடுதிப் புளியமரங்களில் வைக்கப்பட்டிருந்த சிலிண்டர் குண்டு வெடிக்கவைக்கப்பட்டது

சிலிண்டர் தாக்குதல் நடத்த புலிகள் நேரடி மோதலில் ஈடுபட்டனர்.

இதனால் உணவுப் பொருள் ஏற்றிச் சென்ற லொறி ஒன்று சேதமடைந்ததாகவும், நடைபவனியில் சென்ற சிப்பாய்கள் மூவர் கொல்

(4ம் பக்கம் பார்க்க)

கும்புறுப்பிட்டியில் 2 சிப்பாய்கள் பலி! 7 பேர் படுகாயம்!!

யாழ்ப்பாணம், மார்ச் 15

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கும்புறுப்பிட்டி கிராமத்தை நேற்றுக்காலை கவசவாகனம் சகிதம் சுற்றி வளைக்க முயன்ற நூற்றுக் கணக்கான சிப்பாய்கள் மீது தமிழ்போராளிகள் தாக்குதல் நடத்தியதில் இரண்டு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். 7சிப்பாய்கள் காயமடைந்தனர்

படையினர் மீது தமிழ் போராளிகள் ரொக்கட் தாக்குதல் நிகழ்த்தினர். துப்பாக்கிப் பிரயோகமும் மேற் கொள்ளப்பட்டது.

மோதலின் போது இராணுவ தரப்பில் இருவர் கொல்லப்பட்டதாகவும் 7 பேர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது

இம் மோதலின் போது நான்கு பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாகவும். பல ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகவும் அரசு மேலும் அறிவித்துள்ளது. (உ-10)

நாவற்குழியில் ஹெலித்தாக்கு

யாழ்ப்பாணம் மார்ச்15

நாவற்குழியில் இரண்டு ஹெலிகொப்டர்கள் நேற்று தாக்குதல் நடத்தியதில் ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுக்காலை ஏழு மணியளவில் பலாலிப் பக்கமாக இருந்து வந்த ஹெலிகொப்டர்களே தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டன. (உ-10)

கச்சதீவும் பிரச்சினை; சுப்பிரமணியசுவாமி நீதிமன்றம் செல்வார்

சென்னை, மார்ச் 14

கச்சதீவுப் பிரச்சினை தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் போவதாக இந்துஸ்தான் முன்னாள் தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி அறிவித்திருக்கிறார்.

1974 ஆம் ஆண்டு உடன்படிக்கையின்படி, கச்சதீவுக்கு அருகே மீன்பிடிக்கவும் கச்சதீவுக்குச் செல்லவும் இந்திய மீனவருக்கும் உரிமை உண்டு என்பதை நிரூபிப்பதே நீதிமன்றத்தில் வழக்குத் தொடர உள்ளேன்"– என்று டாக்டர் சுப்பிரமணிய சுவாமி சொன்னார்.

இலங்கையில் இராணுவத்தினரும் பொலீஸாரும் தமிழர்களைக் கொன்று வருகின்றனர். பஞ்சாப்புடன் இலங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

பலாலி ராணுவ முகாமில் மொசாட் படை குவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 15

பலாலி இராணுவ முகாமில் இஸ்ரவேலிய மொசாட் படைகள் மேலும் குவிக்கப்பட்டிருப்பதாக நம்பகமாகத் தெரிய வந்துள்ளது.

நேற்று முன்தினம் விசேட ஹெலிகொப்டர் மூலம் ஐம்பதுக்கு மேற்பட்ட வெள்ளையர்கள் கொண்டுவந்து இறக்கப்பட்டனர்.

இவர்களே ஏனைய ஸ்ரீலங்கா சிப்பாய்களுக்கு பயிற்சி அளித்து வருவதாகத் தெரிவருகிறது.

பலாலியிலிருந்து இவர்கள் யாழ் கோட்டைத் தொண்டைமானாறு இராணுவ முகாமுக்கு அனுப்பப்படுவர் என தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் ஏனைய ஸ்ரீலங்கா சிப்பாய்களுக்கு பயிற்சி அளித்து வருவதாகத் தெரிவருகிறது.

பலாலியிலிருந்து இவர்கள் யாழ் கோட்டைத் தொண்டைமானாறு இராணுவ முகாமுக்கு அனுப்பப்படுவர் என தெரிவிக்கப்படுகிறது.

நிலமும் மொசாட் படையினரின் பயிற்சி பலாலி விமானத் தளத்திலும் வேறு பகுதிகளிலும் நடைபெற்று வருவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

வலையில் சிக்கிய பிரசுரங்கள்

வல்வெட்டித்துறை, மார்ச் 15

நேற்றுக்காலை வல்வெட்டித்துறை கடலில் மீனவர்கள் மீன்பிடிப்பதில் ஈடுபட்டிருந்தனர்.

வலைகளை இழுத்த போது வலைகளில் மீன்கள் சிக்கி இருக்கவில்லை; அரசின் துண்டுப் பிரசுரங்களே சிக்கி இருந்தன.

வெள்ளி மாலை 7 மணிக்கும் 8 மணிக்கும் இடையே அரச படையினர் ஹெலிகொப்டர் மூலம் வடமாட்சிப் பகுதியில் வீசிய துண்டுப் பிரசுரங்களே கடலில் வீழ்ந்து பின்னர் இப்படி மீன்பிடி வலைகளில் சிக்கின. (இ-எ-160)

பத்திரிகைநிர்வாகியின் அலுவலகம் சோதனை

புதுடில்லி, மார்ச் 15

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழின் தலைவர் ராம்நாத் கோயங்காவின் அலுவலகம் கடந்த வெள்ளி இரவு மத்திய புலனாய்வு அதிகாரிகளால் திடீரெனச் சோதனையிடப்பட்டது.

அலுவலகம் இருந்த இடத்திற்கு அருகே எவரும் செல்லாதபடி பொலீசார் கவனம் புரிந்தனர்.

அதே நேரத்தில் இந்தியன் எக்ஸ்பிரஸ் நிறுவனத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் ஒருவர் சென்னையில் கைது செய்யப்பட்டார்.

பிரதமர் காந்தி நாடாளுமன்றத்தில் பொய் சொல்லி விட்டார் என்று குற்றஞ் சாட்டி ஜனாதிபதி ஜெயில் சிங் எழுதிய தவிப்பட்ட கடிதம் எப்படி இப்பத்திரிகைக்குக் கிடைத்தது என்பதைக் கண்டறியவே இந்நேடுதல் இடம்பெற்றது என்று பி.பி.சி தெரிவித்தது. (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

சேவை

தனசிரி எங்களுடைய கிறாபனக் இரவு 8-45 வரை திறந்திருக்குமென அறியத்தருகின்றோம். யாழ் நகரில் நெக்ரோ நன்றி 124, (R. R. நல்லூர் வீதி, முதலாம் குறுக்குத் தெரு), யாழ்ப்பாணம். தொலைபேசி: 23460.

செய்திக்கொத்து

பண்ணிசைப் போட்டி

பருத்தித்துறை, மார்ச்15 நாகர்கோவில் வெள்ளி அணிப் பாடசாலைகளுக்கிடையேயான பண்ணிசைப் போட்டி அரும்பன் அரசினர் தமிழ் வித்தியாலய மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை நாகர்கோவில் கொத்தணிப் பாடசாலை அதிபர் திரு. க. பரமகுரு தலைமையில் நடைபெறும். (இ-118)

டிறிபேக்கில் நடந்த கருத்தரங்கு

சாவகச்சேரி, மார்ச் 15 தொழில் நுட்பக் கல்வி ஆண்டு பற்றிய சாவகச்சேரிக் கல்வி வட்டாரத்துக்கான கருத்தரங்கு டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது

அதிபர்கள் மட்டத்திலான இக்கருத்தரங்கை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. அ. தங்கராசா தலைமை வகித்து ஆரம்பித்து வைத்தார்.

யாழ் கல்வித் திணைக்கள தொழில் நுட்பக் கல்வி அலுவலர் திரு. ச. கப்பிரமணியம் கருத்துரைகளை வழங்கினார். (இ-31)

சமய சொற்பொழிவு

சாவகச்சேரி, மார்ச் 15 கற்குழி ஸ்ரீகந்தசுவாமி ஆலயத்தில் ஆத்மஜோதி ஆசிரியர் நா. முத்தையா அவர்கள் மண்டலாபிஷேக காலதொடர் சமயச் சொற்பொழிவுகளை ஆற்றிவருகிறார்.

இம்மாதம் 28 ஆம் திகதிவரை இச்சொற்பொழிவுகள் தொடர்ந்து நடைபெற ஏற்பாடாகி இருக்கின்றது. (இ-31)

மெயில் ரயிலால் பிரயாணம் இலகுவாகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 15 கொழும்பு— வவுனியா மெயில் ரயிலால் யாழ் பயணிகளின் பிரயாண அலைச்சல் குறைந்துள்ளது

இந்த மெயில் ரயில் இரவில் கொழும்பில் இருந்து புறப்பட்டு அதிகாலை 5. 30 மணி அளவில் வவுனியா வந்தடைகின்றது

வவுனியாவுக்கு வந்த பயணிகள் நன்பகலுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்தடையக் கூடியதாகக் காணக் கூடியதாக இருக்கின்றது. (இ-எ-10)

ஆண்டு விழா

பருத்தித்துறை மார்ச்15 பருத்தித்துறை கல்வி வளர்ச்சிக் கழகத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு சு. நடராசா தலைமையில் நடைபெறும்

விழாவில் முதலாவது தலைவரில் நடத்தப்பட்ட பரீட்சையில் சிறப்பாகச் சித்தியடைந்த மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். (உ-118)

வணிக மஞ்சரி அறிமுக விழா

யாழ்ப்பாணம், மார்ச்15 'வணிக மஞ்சரி' அறிமுக விழாவும் கருத்தரங்கும் இன்று ஞாயிறு காலை கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

இன்றைய தினம் 'வணிக மஞ்சரி'யின் இரண்டாவது இதழும் வெளியிடப்படும். பட்டயக் கணக்காளர் திரு. வே. அரியரத்தினம் தலைமை வகிப்பார்.

இன்று நடைபெறும் கருத்தரங்கில் "வங்கிச் செயற்பாடுகள்" பற்றி ஆராயப்படும்.

சஞ்சிகை அறிமுக உரையை ஹட்டன் தேசிய வங்கி முகாமையாளர் திரு. த. கோவிந்தராஸ் நிகழ்த்துவார்.

இலங்கை வங்கி பிரதம முகாமையாளர் திரு எம் சுவாரத்தினம், இலங்கை வர்த்தக வங்கி உதவி முகாமையாளர் திரு. இ. வெங்கட்ராமன், இலங்கை வங்கியைச் சேர்ந்த திரு. வே. ஐயம்பிள்ளை, விறான்லி வீதியைச் முகாமையாளர் திரு. ந விக்னேஸ்வரமூர்த்தி ஆகியோரும் உரை நிகழ்த்துவர். (இ-எ)

யாழ் நகரில் தெருக்கள் ஒளி இழப்பு

அரசின் தடை காரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 15 குடா நாட்டுக்கான மின்சார உபகரணங்களை யாழ்ப்பாணம் கொண்டு வர அரசு விதித்துள்ள தடையால் யாழ் மாநகர சபைப் பகுதியிலுள்ள பல தெருக்கள் ஒளி இழந்துள்ளன

யாழ் மாநகர ஆணையாளர் திரு சீ வி கே. சிவஞானம் மேற்கண்டவாறு தெரிவித்தார்

மாதாந்தம் 1200 மின்குமிழ்கள் தெருவிளக்குகளுக்குத் தேவை.

அரசின் மின்சாரப் பொருள்கள் தடையால் இரண்டு மாதங்களாக தெருவிளக்குகள் மாற்றப்படவில்லை.

மேலும் பராமரிப்பு, திருத்த வேலைகளும், புதிய மின் இணைப்பு வேலைகளும் அரசின் மின்சாரப் பொருள்கள் தடையால் நடைபெறாமல் நடைப்பட்டுள்ளன.

இவ்வாறு ஆணையாளர் தெரிவித்தார். (இ-எ)

வானைத் துரத்திய ஹெலிக்கொப்டர்

வல்வெட்டித்துறை, மார்ச் 15 வல்வெட்டியில் மினி வான் ஒன்றை ஹெலிக்கொப்டர் துரத்திச் சென்றது.

வெள்ளி காலை 11 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

இந்த வான் வல்வெட்டித்துறையில் இருந்து யாழ் நோக்கி வந்து கொண்டிருந்தது

வலை வெளியில் வைத்து வானில் மேல் ஹெலி வட்டமிடத் தொடங்கியது.

சாரதி தனது சாதுரிய நடவடிக்கையால் வானை மர மறைவினுள் செலுத்தினார். இதனால் பயணிகள் உயிர் தப்பினர்.

'ஹெலி' மறைந்த பின்னர் வான் மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தது (உ-எ-160)

வீரவணக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 15 மன்னாரில் கியாழன்று பரிசோதனை ஒன்றின் போது தவறுதலாக ஏற்பட்ட வெடி விபத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ரூபன் (மன்னார்) என்ற போராளி மரணமானார்.

அவருக்கு வீரவணக்கம் தெரிவித்து விடுதலைப் புலிகள் இயக்கம் அறிக்கை ஒன்றை விடுத்தது. (உ)

மக்கள் முகம்

மல்லாகம் சட்டத்தரணிகள் சங்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 15 மல்லாகம் சட்டத்தரணிகள் சங்கத்தின் 1987 ஆம் ஆண்டிற்கான அங்கத்தவர்கள்:

தலைவர்:— திரு எஸ். நடராஜா, உபதலைவர்— திரு ஏ. குமாரகுரு, திரு ஜி. வி. பாலசிங்கம், திரு. எஸ். சிறீதரநாதன். கௌரவ காரியதரிசி:— திரு எஸ். தேவராஜா கௌரவ பொருளாளர்— திரு எஸ் பி. சிவஞானம்.

குழு உறுப்பினர்கள்:— திரு வி. எஸ் கணேசலிங்கம், திரு.எம். சபாரத்தினம், திரு. இ. வேரத்தினம், திரு. ஏ. பி நாராஜன், திரு. எஸ் ஜீவேஸ்வரா, திரு. கே. விஸ்வலிங்கம், திரு. எஸ். தம்பிமுத்து, செல்வி.எஸ். கந்தசாமி. (இ)

விளையாட்டரங்கு

சென் அன்ரனிஸ் சாம்பியனாகியது

யாழ்ப்பாணம், மார்ச்15 யாழ் கழகங்களுக்கிடையே செட் அப்மேல் முறையில் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் சென் அன்ரனிஸ் வி. க. சாம்பியனாகியது.

இந்த அணி குருநகர் வி.க. அணியை இறுதி ஆட்டத்தில் வென்று சாம்பியனாகியது.

இப்போட்டியை விளையாட்டு அமைச்சு நடத்தியது

சென் அன்ரனிஸ் நிடலில் போட்டி நடைபெற்றது.

முன்னர் நடைபெற்ற போட்டிகளில் குருநகர் வி.க. அணி நிம்மதி வி.க. அணியை வென்றது

சென் அன்ரனிஸ் வி.க. அணி செற் நிக்ஸ் அணி சமூகம் அளியாத காரணத்தால் வென்று இறுதி ஆட்டத்துக்குத் தெரிவாகியது. (இ)

சுன்னாகத்தில் இல்ல விளையாட்டு போட்டிகள்

சுன்னாகம், மார்ச் 15 சுன்னாகம் ரோமன் க.த.க. பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுனர் போட்டிகள் இன்று ஞாயிற பிற்பகல் 1 00 மணிக்கு ஆரம்பமாகின்றன,

பாடசாலை அதிபர் திரு அ. பதுவைநாயகம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் யாழ் கல்வித் திணைக்களத்தில் கணக்காளர் திரு வி. யோசப் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கின்றார்.

தனிநாயகம் அடிகளார் இல்லம், ஞானப் பிரகாசியார் இல்லம் ஆகியவற்றினிடையே போட்டிகள் நடைபெறுகின்றன. (இ-27)

"ஈழத்து புனைகதைகளில் பேச்சு வழக்கு"

யாழ்ப்பாணம், மார்ச்15 திரு. சி. வன்னியகுலத்தின் "ஈழத்து புனைகதைகளில் பேச்சு வழக்கு" நூலின் அறிமுக விழா யாழ் ஸ்ரீலங்கா வித்தியாசாலை பா ஜெயபாலன் அரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்

திரு. தெணியான் வெளியீட்டுரையும், தலைமையுரையும் நிகழ்த்துவார்.

விழாவை ஆக்கையூர் கலை இலக்கிய மன்றத்தினர் ஒழுங்கு செய்துள்ளனர் (இ-5)

திருமலைப் பிரசைகள் குழுவினர் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், மார்ச் 15 யாழ் நகரில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலுக்கு இலக்கான யாழ் ஆஸ்பத்திரியையும், எரிந்த கடைகளையும், தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த பொது மக்களையும் திருமலை பிரசைகள் குழுவினர் பார்வையிட்டனர்.

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருந்து திருகோணமலை மீனவர்களை மீட்டுச் சென்ன வந்தபொழுதே அவர்கள் இவற்றைப் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டிருக்கும் எரிபொருள் தடைகாரணமாக மக்கள் படும் வேதனைகளையும் பிரசைகள் குழுவினர் கண்டறிந்தனர். (இ-10)

பல்கலைக்கழக பணியாளர் தொகுதி குடியிருப்பு மனைகளின்பொருட்டு

வாடகைக்கு/ குத்தகைக்கு விடு

குடியிருப்பு மனைகளைப் பயன்படுத்துவதற்காகப் பல்கலைக்கழகத்தின் கற்றலிலுள்ள வீடுகளை வாடகைக்கு/ குத்தகைக்கு விட விருப்புடைய வீட்டு உரிமையாளர்களிடமிருந்து, 1987 மார்ச் மாத இறுதிக்கு முன்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் விண்ணப்பங்களை கோருகின்றது.

விண்ணப்பங்கள் பின்வரும் விவரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) தூரம் பற்றிய விவரங்கள்

(ஆ) தளப்பரப்பின் விவரம் உட்பட வசதிகள் பற்றிய விவரங்கள்

(இ) நியதிகளும் நிபந்தனைகளும்

(ஈ) பொருத்தமான ஏனைய தகவல்கள்

பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
04-03-1987.

எரிபொருள், உணவு

அனுப்ப இந்தியாவிடம் சட்டத்தரணிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 15 பொருளாதாரத்தடை காரணமாக நிர்க்கதிக்குள்ளாகியிருக்கும் யாழ். குடா மக்களுக்கு எரிபொருளும் உணவும் அனுப்பி உதவ இந்தியா முன்வரவேண்டும்

—இப்படி மல்லாகம் சட்டத்தரணிகள் சங்கம் இந்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது சம்பந்தமாக சங்கம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி இந்தியத் தூதர் ஊடாக இந்திய அரசுக்கு அனுப்பிவைத்துள்ளது

சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம், ஐ. நா. அகதிகள் ஆணைக் குழு ஆகியவற்றின் பிரதிநிதிகளையும் பார்வையாளர்களாக இலங்கைக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. (உ-எ)

கடற்கரை வீதியில் இளைஞன் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 15 யாழ் கடற்கரை வீதி வழியே சைக்கிளில் சென்றோர் மீது ஜீப்பாக்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

இந்த வீதியில் அகதி கடு மேற்கொள்ளப்படும் துப்பாக்கிப் பிரயோகத்தினால் இதுவரை பத்துக்கும் அதிகமானோர் காயமடைந்ததுடன் சிலர் கொலையுண்டும் உள்ளனர்

வெள்ளியன்று சம்பவத்தில் முடமாவடியைச் சேர்ந்த சுனகசுந்தரம் மகேசன் (17 வயது) என்ற இளைஞரே காயமடைந்தார்.

இவருடன் சென்ற மற்றொருவர் மயிரிழையில் உயிர் தப்பினார். (உ-எ)

மெயில் ரயிலால் பிரயாணம் இலகுவாகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 15 கொழும்பு— வவுனியா மெயில் ரயிலால் யாழ் பயணிகளின் பிரயாண அலைச்சல் குறைந்துள்ளது

இந்த மெயில் ரயில் இரவில் கொழும்பில் இருந்து புறப்பட்டு அதிகாலை 5. 30 மணி அளவில் வவுனியா வந்தடைகின்றது

வவுனியாவுக்கு வந்த பயணிகள் நன்பகலுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்தடையக் கூடியதாகக் காணக் கூடியதாக இருக்கின்றது. (இ-எ-10)

ஆண்டு விழா

பருத்தித்துறை மார்ச்15 பருத்தித்துறை கல்வி வளர்ச்சிக் கழகத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு சு. நடராசா தலைமையில் நடைபெறும்

விழாவில் முதலாவது தவணையில் நடத்தப்பட்ட பரீட்சையில் சிறப்பாகச் சித்தியடைந்த மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். (உ-118)

காணாமற்போன மோதிரங்கள்

யாழ்ப்பாணம், மார்ச்15 ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி மரணமான இருவர் அணிந்திருந்ததாகக் கூறப்படும் மோதிரங்கள், கைக்கடிகாரம் ஆகியவை யாழ் ஆஸ்பத்திரியில் திருட்டுப் போயுள்ளனவாம்.

கடந்த 7ஆம் திகதி சனிக்கிழமை யாழ் கோட்டையில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலால் காரணமாக காயமடைந்திருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கே.ஜெயம், பூவரசங்குளத்தைச் சேர்ந்த சின்னையா இராசலிங்கம் ஆகிய இருவரும் பின்னர் ஆஸ்பத்திரியில் உயிரிழந்தனர்.

பிரேத அறையில் சடலங்கள் வைக்கப்பட்டபோது ஜெயம் என்பவரின் சடலத்தில் 2 மோதிரங்களும், இராசலிங்கத்தின் சடலத்தில் கைக் கடிகாரமும் மோதிரமும் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

பின்னர் அவை காணப் படவில்லையாம். (இ-எ)

"தமிழ் மக்களைக் காப்பாற்ற உதவுக"

பருத்தித்துறை வர்த்தகர் சங்கம் திருமதி ஜெயவர்த்தனவுக்கு தந்தி

பருத்தித்துறை, மார்ச்15 'யாழ் மாவட்டத்தில் தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகளினால் அப்பாவித் தமிழ் பேசும் மக்கள் நாளுக்கு நாள் கொல்லப்பட்டும் அங்கவீனர்களாக்கப்பட்டும் வருகிறார்கள். இந்த அவல நிலையிலிருந்து தமிழ் பேசும் மக்களை காப்பாற்ற ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்'

பருத்தித்துறை வர்த்தகர் சங்கம் இலங்கை ஜனாதிபதியின் பாரியார் திருமதி ஜெயவர்த்தனவுக்கும் மற்றும் கனடா, அமெரிக்கா, ரஷ்யா ஆஸ்திரேலியா, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கான உயர் ஸ்தானிகர்களுக்கும் மேற்கண்டவாறுகோரிக்கை விடுத்து தனித்தனியான அவசர தந்திகளை அனுப்பியுள்ளது

கடந்த 7 ஆம் திகதி யாழ் மாவட்டத்தில் 30க்கும் மேற்பட்ட அப்பாவிப் பொது மக்கள் யாழ் இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்லினால் கொல்லப்பட்டனர். 100 க்கும் மேற்பட்ட பொது மக்கள் படுகாயமடைந்தனர்.

மேலும் யாழ் மாவட்டத்தில் பல அரசினர் வைத்தியசாலைகள் இயங்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

காங்கேசன்துறை, மயிலிட்டி, தெல்லிப்பழை, யாழ் பெரியாஸ்பத்திரி என்பன அடுக்கடி இராணுவத்தினரின் மனிதாபிமானமற்ற தாக்குதல்களுக்கு உள்ளாகின்றன.

இவற்றை உடன் போக்கித் தமிழ் பேசும் மக்களைக் காப்பாற்ற வேண்டும்.

இப்படி தந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-118)

ஆலாபனா இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், மார்ச்15 'ஆலாபனா'வின் இம் மாத இசை நிகழ்ச்சிகள் இன்று ஞாயிற மாலை 6 மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடைபெறும்.

முதலில் செல்வன் பா. கண்ணனின் வயலின் கச்சேரி இடம் பெறும்.

திரு.எஸ். மகேந்திரன் மிருதங்கமும் திரு ப. சிறுபாலன் கஞ்சிராவும் வாசிப்பர்.

'திருமுறைகளிற் பண்' என்னும் பொருள் பற்றி பேராசிரியர் அ சண்முகதாஸ் பேசுவார்.

பின்னர் திரு. எஸ். வி எம் நவரத்தினத்தின் இசைக்கச்சேரியும் நடைபெறும்.

வயலின்: வி கே. குலராசாமி, மிருதங்கம்: பி. சிவதாசன், முகர்சிங்: என். ராஜா (இ-எ)

கோட்டைக் கிளைகள் இயங்கவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 15 யாழ். கோட்டை முகாமில் உள்ள தபாலகம், வங்கிகள் வெள்ளியன்று இயங்கவில்லை.

காலை நேரத்தில் கோட்டையில் இருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக கடமைக்குச்சென்ற ஊழியர்கள் இடை வழியில் திரும்பி வந்தனர். (உ-10)

HORIZON ENTERPRISES

பிரயாண ஒழுங்குகள்

● குவைத் ● சவூதி
● டோகா கட்டார்
● மாலைதீவு

ஆகிய நாடுகட்கு நாம் குறிப்பிட்டபடியே உங்களது பயணத்திற்கான பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும் பணிப்பெண்களுக்கான பிரயாண ஒழுங்குகள் குறைந்த கட்டணத்தில் துரிதகதியில் மேற்கொள்ளப்படும்.

எமது முகவர் நிலையத்தினூடு பயணம் மேற்கொள்வோர் பெயர் விபரங்களை வாரந்தோறும் வெளியிடுகிறோம். கடந்த வாரம் பயணம் மேற்கொண்டோர் விபரம், இவ்வாரம் பயணம் மேற்கொள்வோர் விபரங்கள் அடுத்தவாரப் பத்திரிகையில். நாம் மத்திய கிழக்கு நாடுகளுக்கான ஒழுங்குகள் மட்டுமே மேற்கொள்கிறோம். எமக்கு வடபகுதியில் வேறு கிளைகள் கிடையாது. எம்முடன் தொடர்புகொள்வோர் முத்திரை ஒட்டிய கவருடன் தொடர்புகொள்ளவும்.

1. தம்பிராசா வசந்தராசா
புலவனார் லேன், கல்லியங்காடுயாழ்.
2. ஜேம்ஸ் பவஸ்ரின் ராசநாயகம்
இளவாலை மேற்கு, இளவாலை.
3. கதிரவேலு கருணநிதி
இணுவில் மேற்கு, சுன்னாகம்.
4. நல்லதம்பி மகேந்திரகுமார்
நெடுந்தீவு மேற்கு. வாட் நம். 8, நெடுந்தீவு.
5. கந்தசாமி தவராசா
துன்னாலை தெற்கு, காரவெட்டி.
6. நாகேந்திரன் பாலகப்பிரமணியம்
விநாயகர் வீட்டுமைதானவீதி. கோப்பாய்
7. ஐயம்பிள்ளை சத்தியவதி (தெற்கு
கட்டுக்காணி ஒழுங்கை, சாவகச்சேரி.
8. ஐயாத்துரை நடராசா லலிதாம்பிகை
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
9. ராசினி ராசரட்ணம்
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
10. அன்ரனி ஞானமுத்து செபஞானமலர்
அம்மன் வீதி, பண்டத்தரிப்பு.

யாழ் முகவரி:
A. பத்மதாஸ்
மதுராவிடியோ ஸ்ரோர்,
இல. 96,
4 ஆம் குறுக்குத் தெரு,
சின்னக்கடை, யாழ்.
தொலைபேசி: 23549

கொழும்பு முகவரி:
HORIZON ENTERPRISES,
No. 87 2/1
Kollupitiya Lane,
Kollupitiya
Colombo - 3
Telephone: 574000

விக்ரு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

(கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

A/L 89 ஆரம்பம் 21 - 03 - 1987 பகல் 12 - 00 மணி

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

பொருளியல் : திரு. கிருஷ்ணானந்தன்
வர்த்தகவியல் : திரு. லதிகாதரை
கணக்கியல் : திரு. வன்னியசிங்கம்
அளவையியல் : திரு. கப்பிரமணியம்
இந்து நாகரிகம்: திரு. காரை சுந்தரம்பிள்ளை
தமிழ் : திரு. குழந்தை
புவியியல் : திரு. குணராஜா
அரசியல் : ஜனுப். மஃறூவ்
கிறிஸ்தவம் : திரு. பேசுரட்ணம்

மு. குறிப்பு: I. 88 A/L Day Classes ஆரம்பமாகவுள்ளது

மாணவர்கள் முன்கூட்டியே பெயர்களைப் பதிவுசெய்துகொள்ளவும்

II. 89க்கான அனுமதிகளையும் முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

★ பிரயாணத்திற்குத் தயாராகுங்கள்

உங்களைப் பாதுகாப்பாகக் கூட்டிச் செல்ல

GLORIA TRAVELS

ஆயத்தமாக இருக்கிறது

● அவுஸ்திரேலியா
● ஜேர்மனி
● பிரான்ஸ்
● இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு நீங்கள் தயக்கமின்றிச் செல்ல எல்லா ஏற்பாடுகளையும் சிறப்பாகச் செய்து தருகின்றோம்.

எமது பிரதான முகவர் உங்களைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்கிறார்.

பாஸ்போர்ட், வொஸ்ட் (Bond), விசா, ரிக்கெட் ஆகியவையும் செய்து தரப்படும்.

★ சவூதி அரேபியா

இங்கு பிரதான ஒழுங்குகளை மேற்கொள்ள விரும்புபவர்கள் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

GLORIA TRAVELS,
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

★ எமக்கு வேறு கிளைகள் கிடையாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

உங்கள் காரியங்கள் எல்லாம் அன்புடன் செய்யப்படக்கடவது.

— பைபிள்.

உதயன்

இல.15,1ஆவதுஒழுங்கை தொலைபேசி:34805
மின்சார நிலைய வீதி, 22078
யாழ்ப்பாணம் 15-03-1987 த.பெ.இல. 88

அவமானத்தின்பின்னராவது தய உணர்வு திரும்புமா?

இலங்கை அரசாங்கப் படைகள், தமிழ் மக்களின் மனித உரிமையை மீறுவதையும், அவர்களுக்கு எதிராக நடத்தும் அட்டூழியங்களையும் நேரில் கண்டறிவதற்காகச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் வருவார்கள்.

இனப் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காண்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் அவர்கள் ஆராய்வார்கள்.

இவற்றுக்கு வகை செய்யும் திர்மானம் ஐ. நா. வின் மனித உரிமை ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்பட்டு விட்டது. கனடா, நோர்வே ஆகிய நாடுகளின் அனுசரணையுடன் ஆர்ஜென்ரீனா கொண்டு வந்த பிரேரணை சில திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இலங்கையும் தனக்குத் தோல்வி என்ற நிலையைச் சமாளித்து, மறைத்து ஆர்ஜென்ரீனாவின் திருத்தப்பட்ட தீர்மானத்துக்கு இணங்கியுள்ளது.

ஆர்ஜென்ரீனாவின் மூலப்பிரேரணை இலங்கையைக் கடுமையாகக் கண்டிப்பதாகவும், உலக அரங்கில் அதற்கு அவமானத்தைத் தேடித் தருவதாகவும் அமைந்திருந்தது. அதனால், தன் தரப்பினால் தம்பிரான் புண்ணியம் என்ற நோக்கோடுச் செயலாற்றி ஒருவாறு சமாளித்துக் கொண்டு விட்டது இலங்கை!

"இந்தியாவும், ஆர்ஜென்ரீனாவும் தமது நோயை முதலில் தீர்த்துவிட்டு எமது நோயை தீர்ப்பதற்கு வரட்டும்" இப்படிக் கொழும்பில் நின்று பெருந்தலைவர் வீம்பு பேசினார். அப்போது அவர் இலங்கைக்கு நோய் கண்டு என்பதையும், இன்று மனித உரிமைகள் மீறப்படுகின்றன என்பதையும் மறைமுகமாக ஒப்புக்கொண்டு விட்டார்.

அங்கோ ஜெனீவாவில், அவரது சகோதரர், சர்வதேசத் தொலைவியிலிருந்து மிகச் சிரமப்பட்டு, 'கும்பிடு சாமி' போட்டுத் தப்பிக்கொண்டார்! "அவர் காலில் விழுந்து இவர் காலில் விழுந்து" காரியத்தை ஒருவாறு ஒப்பேற்றிவிட்டார்!!

ஆனால் இங்கோ, ரூபவாஹினியில் பிரதி வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவும், 'முடிமறைப்பு' மன்னன் அத்துலத்துமுதலியும் ஏதோ வெற்றி கிடைத்து விட்டதாக வீரப்பிரதாபங்கள் பேசினார்கள்.

போர்லாந்து விடயத்தில் தாம் ஆதரித்தாக, தனது அக்கிரமத்தை முடிமறைக்கப் பிரிட்டன் துணைபோகும் எனத் தப்புக் கணக்குப் போட்டு, முக்குடைபட்டு விட்டது இலங்கை.

ஆத்மார்த்த நண்பன் அமெரிக்காவே தன்னைக் கைவிடும் என்று இலங்கை எதிர்பார்க்க நியாயமில்லைதான். ஆனால் அரசபடைகள் மனித உரிமையை மீறுவதாகவும், தமிழர்களைச் சித்திரவதை செய்து கொன்று குவிப்பதாகவும் அமெரிக்கக் காங்கிரஸில் அரசதுணை அமைச்சர் கிவரம் வெளிவிட்டுள்ளார் என்பதை இலங்கை அமைச்சர்கள் மறந்து விட்டார்களோ என்னவோ!

தமிழ்ப் போராளிகளைக் கம்யூனிஸ்டுகளாகக் காட்டியதும் வெறும் பொய் என்பதைக் கூட அமெரிக்க நண்பன் கண்டுபிடித்த பின்னர் இலங்கை இனி என்ன செய்யப் போகிறது?

நன்பனின் கெட்ட நடத்தையை அமெரிக்கா அம்பலப்படுத்தத் தொடங்கியிருக்கிறது. அது தனிவிவகாரமாக ஆராயப்பட வேண்டியது எந்த நிலையில், என்ன நோக்குடன் இப்படி அது நடவடிக்கை மாற முயல்கிறது. திரை மறைவில் இரகசிய ஏற்பாடு ஏதாவது இருக்காதா என்பதும் ஆழமாக ஆராயப்பட வேண்டியதே.

எது எப்படியோ, தமது பொய்ப்பிரசாரம் – உண்மையை உலகுக்கு மறைக்கும் முயற்சி – சரிப்பட்டு வராது என்பதை இனியாவது இலங்கை அரசு உணருமா?

தனது அக்கிரமம், அட்டூழியம், அநீதியான ஆட்சி என்பன வெளிச்சத்துக்கு வந்து விட்டன என்பதை இலங்கை அரசு இப்போது உணர வேண்டும்.

தனது மதிப்பையும், மரியாதையையும், மானத்தையும் மீளப்பெறுவதானால் இனப் பிரச்சினைக்குத் தாமதமின்றி ஒரு சுமுக தீர்வு காண்பது அவசியம்.

அதற்காக, முதலில் தமிழ் மக்களின் மண்ணிலிருந்து முற்று முழுதாக அரசபடைகளை உடனடியாக வாபஸ் பெற வேண்டும். பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்ற பயங்கரச் சட்டத்தை நீக்க வேண்டும். அவசரகாலச் சட்டத்தையும் நீக்கி விடலாம்.

தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவேற்றும் விதத்தில் ஒற்றையாட்சி அரசமைப்பை மாற்ற வேண்டும். தமிழர்கள் தம்மைத் தாமே ஆளவைக்கும் சுயாட்சி உரிமையை வழங்க வேண்டும். தமிழர்களும் சிங்களவர்களும் அப்போது நாம் பிரச்சினையின்றி, இரத்த வெள்ளத்தைத் தவிர்த்து நண்பர்களாக வாழமுடியும்.

இரத்த ஆறை விற்று கொண்டு வாய்வந்தபடி விட்டுக் கொண்டு, புத்த தர்மத்தையும், வேதாகமத்தையும் ஆரோக்கியர் வர்த்தியையும், மகாத்மா காந்தியையும் உதாரணம் காட்டிப் பேசி ஆகப்போவது எதுவுமில்லை.

அடக்கி ஆளும் ஆதிக்க வெறி எனும் மதுவை அருந்தி மயக்க நிலையில் உள்ள 'தம் மிஸ்ட்' அரசே, ஆளுங் கட்சியினரே! இப்போதாவது மதுமயக்கத்திலிருந்து விடுபட்டு கண் உணர்வுக்கு வாருங்கள். மதுப் புட்டியை தூர வீசுங்கள்!!

ராஜீவ் அறிவிப்பு

புதுடில்லி, மார்ச்14 இந்தியாவின் பாதுகாப்புச் செலவினத்தைக் குறைக்கமுடியாது என்று பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று நாடாளுமன்றக் கூட்டத்தில் அறிவித்தார்.

இந்தியாவைச் சுற்றியுள்ள நாடுகளில் நாசகார சக்திகள் இயங்கும் போது பாதுகாப்புச் செலவினத்தைக் குறைக்க முடியாது என்று பிரதமர் மேலும் தெரிவித்தார். (ஒ-எ)

யுத்தக்கப்பல் வெளியேறியது

டாக்கா, மார்ச் 14 இந்தியாவின் நவீன யுத்தக்கப்பலொன்று 'வால்கொடாமா' பங்களாதேஷின் கடற்பிராந்தியத்திலிருந்து வெளியேறியுள்ளது.

கடந்தவாரம் பங்களாதேஷின் தென்பகுதியில் உள்ள ஆற்றின் சமுத்திரம் ஒன்றில் இந்த யுத்தக் கப்பல் காணப்பட்டதைத் தொடர்ந்து பங்களாதேஷ் அரசு இந்தியாவிடம் ஆட்சேபம் தெரிவித்திருந்தது. (ஒ)

ஆப்கானிலிருந்து ரஷ்ய துருப்புக்கள் வெளியேறுமாம்

கிசிங்கர் ஆருடம்!

காபூல், மார்ச் 14 ஆப்கானிஸ்தானிலிருந்து ரஷ்ய ஆக்கிரமிப்பு விரைவில் அமைதியான முறையில் முடிவுக்கு வரும்.

இவ்வாறு முன்னாள் அமெரிக்க வெளிநாட்டமைச்சர் ஹென்றி கிசிங்கர் ஆருடம் தெரிவித்தார்.

ரஷ்ய சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவரின் இரகசிய தகவலைத் தொடர்ந்தே இந்த ஆருடத்தை வெளியிடுவதாக கிசிங்கர் மேலும் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் ஒரு கம்யூனிஸ நாடுதான். அதுடன் சோவியத் அடிப்படையில் கொள்கைகள் கட்டமைக்கு இல்லை. எனவே தற்போதைய அரசாங்கம் தொடர்ந்தும் ஆப்கானில் நிலைபெற ரஷ்யா எவ்வித ஆர்வமும் காட்டாது. இதனால் கடந்த எட்டு வருட காலமாக அங்கு நடைபெற்று வரும் யுத்தத்திலிருந்து ரஷ்யா அமைதியான முறையில் வெளியேறவே விரும்புகின்றது.

ஆப்கானிஸ்தானில் இருந்து 1 லட்சத்து 50 ஆயிரம் துருப்புக்களையும் அடுத்த ஆறுமாதங்களுக்குள் ரஷ்யா விலக்கும் என்ற அறிவிப்பு சீக்கிரம் ரஷ்யாவால் வெளிவிடப்படும் எனவும் அந்த அதிகாரி தெரிவித்ததாக கிசிங்கர் மேலும் தெரிவித்தார்.

துருப்புக்கள் வெளியேறியதும் மீண்டும் ரஷ்யா ஆக்கிரமிப்பு எதுவும் நிகழாது என்ற உத்தரவாதமும் ஆப்கான் தலைவர்களிடம் செய்துகொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

பாகிஸ்தான் செயலுக்குக் கண்டனம்

வாஷிங்டன், மார்ச்14 அணுவாயுத திட்டம் பற்றி பல வருடங்களாக தவறான தகவல்களை அமெரிக்காவிற்கு கொடுத்து மிக மோசமான முறையில் பாகிஸ்தான் ஏமாற்றி வந்துள்ளது கண்டிக்கப்படவேண்டும்.

இவ்வாறு நியூயோர்க் டைம்ஸ் தெரிவித்தது.

அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யும் நிலையில் பாகிஸ்தான் இருப்பது தற்பொழுது நன்கு நிரூபணமாகியுள்ளது. எனவே அந்நாட்டுக்கான உத்தேச 200 கோடி டாலர் உதவித் திட்டத்தை உடனடியாக அமெரிக்கா நிறுத்த வேண்டும். இவ்வாறு மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

பாம்புத் தோல் ஏற்றுமதி முறியடிப்பு

சென்னை, மார்ச் 14 1 லட்சத்து 22 ஆயிரத்து 300 பாம்புளின் தோல்களை வெளிநாடுகளுக்கு ஏற்றும் முயற்சி ஒன்றை சென்னை பொலீஸார் முறியடித்தனர். —

இப் பாம்புத் தோல்களின் பெறுமதி சுமார் 20 லட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

பாம்புத் தோல்களைப் பதனிட்ட தொழிற்சாலையின் உரிமையாளரான கே எம் எம் சம்சுதீனை பொலீஸார் கைது செய்தனர். (இ-எ)

விமான ஊழியர் 19பேர் கைது

நியூயோர்க், மார்ச் 14 கென்னடி விமான நிலையத்தில் ஊடாக கடந்த கடந்த 6 ஆண்டுகளாக இடம்பெற்று வந்த போதை வஸ்து கடத்தல் தொடர்பாக விமான சேவைக் கம்பெனி ஒன்றைச் சேர்ந்த 19 ஊழியர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 6 ஆண்டுகளில் 150 கோடி டாலர்கள் பெறுமதியான போதைவஸ்துவைக் கடத்தினார்கள் என்று இவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டு உள்ளது. (இ-எ)

புலன் விசாரணை ஆரம்பம்

வாஷிங்டன், மார்ச் 14 இஸ்ரவேலில் உளவாளிகள் அமெரிக்காவில் பணிபுரிகின்றார்களா?

இதனை அறிந்து கொள்ள அமெரிக்கா தீவிர புலன் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

1985 ஆம்ஆண்டு இஸ்ரவேல் உளவாளி ஒருவர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்தஏனைய இஸ்ரவேல் உளவாளிகள் தம்மை அதிகம் வெளிக்காட்டிக்கொள்ளாமல் மிகவும் இரகசியமாக இயங்கி வருகிறார்கள் என்று வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகைச் செய்தி வெளியிட்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை என அறிவிக்கப்பட்டது. (ஒ)

போதைவஸ்து கடத்தலுக்கு பதவி நீக்கம்

ஒட்டாவா, மார்ச் 14 கனடா பிரதமர் பிரையன் மல்ரோனி தமது முக்கிய ஆலோசகர்கள் சிலரைப் பதவி நீக்கம் செய்து புதியவர்களை அவர்களது இடத்திற்கு நியமித்துள்ளார்.

கடந்த சில வாரங்களாக அரசாங்க உயர் அதிகாரிகளின் நடவடிக்கைகளைக் கண்டித்து வந்த அவர் தனது சிரேஷ்ட ஆலோசகர், பத்திரிகைச் செயலாளர், வெளுநாட்டு தொடர்பு பணிப்பாளர் ஆகியோர் விலக்கப்பட்டுள்ளதாக அறிவித்தார்.

சவூதி அரேபியாவில் மரண தண்டனை

ரியாத், மார்ச் 14 சவூதி அரேபியாவில் போதைப் பொருள் கடத்தல் காரர்களும் வியாபாரம் செய்பவர்களும் தூக்கிலிடப்படுவார்கள்.

இவ்வாறு உள்துறை அமைச்சரான இளவரசர் அப்துல் அஸிஸ் எச்சரிக்கை செய்துள்ளார்.

போதைப் பொருள் தொடர்பான குற்றங்களைப் புரிவோர்க்கு மரண தண்டனை வழங்க வேண்டும் என்ற திட்டத்தை உலமாக்கள் மன்றம் நேற்று அங்கீகரித்தது.

சவூதி அரேபியாவில் இது போன்ற குற்றங்களுக்கு இதுவரை காலமும் 15 வருட சிறைத் தண்டனையும் 100 கசையடிகளுமே வழங்கப் பட்டிருந்தது. (ஒ)

இந்தியாவில் கடல்நீர் மின்சாரம்

காந்திநகர், மார்ச் 14 இந்தியாவில் கடல் நீரிலிருந்து மின்சாரம் பெறும் திட்டம் வெற்றி அளித்துள்ளது.

குஜராத் மாநிலக் கடற்பிரதேசத்தில் முதலாவது நீர் மின்சாரத் திட்டம் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது.

உயர்ந்த அலைகளும் சிறு அலைகளும் இடையில் உண்டாகும் நீர்ச்சுழற்சி மூலம் கடலில் இருந்து நீர் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. (ஒ)

வெளி உலகில்

கூர்க்கா படைப்பிரிவு சிங்கப்பூரில் நீடிக்கும்

சிங்கப்பூர், மார்ச் 14 சிங்கப்பூர் ராணுவம் கூர்க்காப் படைப் பிரிவைத் தொடர்ந்தும் வைத்திருக்க முடிவு செய்துள்ளது.

இவ்வாறு உள்துறை விவகார அமைச்சர் சண்முகம் ஜெயக்குமார் இன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

சிங்கப்பூரில் 1949 ஆம் ஆண்டு தொடக்கம் கூர்க்கா படையினர் இருந்து வருகின்றனர். உள் நாட்டில் அமைதியை நிலை நாட்டுவதற்கு மட்டுமே இவர்களது சேவை பெறப்படுகின்றது என்றும் தேசிய பாதுகாப்புக்கான கூலிப் படையாக இவர்களைக் கருத முடியாது என்றும் ஜெயக்குமார் மேலும் தெரிவித்தார்.

சிங்கப்பூர் பிரதமர் லீ-குவான்-யூவின் இல்லத்தையும் கூர்க்கா வீரர்களே காவல் புரிந்து வருகின்றனர். (ஒ)

தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வரும் போது நிலவரை நீர் உவர்த்தன்மை அடையாதா?

பொதுநல ஸ்தாபனங்கள் ஆணையாளரிடம் சந்தேகம்

யாழ்ப்பாணம், மார்ச்15 நிலாவரையில் இருந்து குடி தண்ணீர் வழங்கும் உத்தேசத் திட்டம் குறித்த பல சந்தேகங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன.

பொது நல ஸ்தாபனங்கள் ஐந்து கூட்டாக ஆணையாளருக்கு அனுப்பிய ஒரு மகஜரிலேயே சந்தேகங்கள் எழுப்பப் பட்டுள்ளன.

யாழ் மாநகர வரியிறுப்பாளர் சங்கத் தலைவர் திரு. சு செ மகாதேவா. யாழ்ப்பாணம் பொதுநலசேவா சங்கத் தலைவர் திரு நா. ந. மாணிக்கவாசகர், வடமாகாண அரச விதைநீர் சேவைச் சங்கச் செயலாளர் திரு. இ. தவராசா, ஐயனார் கோவிலடி சனசமூக நிலையத் தலைவர் திரு. வி. பொன்னம்பலம். யாழ் மக்கள் மன்றச் செயலாளர் திரு. த. சி. ஞானரேசன் ஆகியோர் இம் மகஜரில் கையெழுத்திட்டுள்ளனர்.

மகஜரில் எழுப்பப்பட்டுள்ள சில கேள்விகள் வருமாறு:-

1. யாழ் மாநகர 1ஆம் கட்ட நீர் விநியோகத் திட்டத்துக்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட போது நிலாவரை நீரும் பரிசோதிக்கப்பட்டது.

கூடுதல் நீர் எடுக்கப்பட்டால் உவராக மாறி விடும் என்று அப்போது நிபுணர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

நீண்டகாலம் 40 – 50 ஆண்டுகளில் பின்னர் நிலத்தின் அடியில் உள்ள நன்னீர் வளம் குன்றிய பின், தொடர்ச்சியாக பல ஆண்டுகளுக்கு நன்னீர் பெற முடியும் என்பதற்கு உத்தரவாதம் உண்டா?

2. பரிசோதனை நடத்திய இஸ்ரவேலிய நிபுணர்கள் பாலை வெருகு மாதிரி நிலத்தில் அடியில் உள்ள நீர்வளம் 15 ஆண்டுகளில்உவர் நீராகி விடும் என்று அப்போது கூறியது இன்று வரைத்துக்கு எடுக்கப்பட்டதா?

3. உவர் நீராகி விடும் என்ற அச்சம் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட அளவே நிலாவரையில் இருந்து விவசாயத்துக்கு நீர் வழங்கப்படுகிறது.

யாழ் மாநகரசபையின் உத்தேசத்திட்டம் விவசாயிகளைப்பாதிக்காதா? அவர்களுக்கு கிடைக்கும் மட்டுப்படுத்தப்பட்ட அளவைக் குறைக்காதா?

1946 இல் நிலாவரைக்கு ஏற்பட்ட நிலை மீண்டும் ஏற்பட்டால் தற்போது கிடைக்கும் மட்டுப்படுத்தப்பட்ட அளவு நீரும் உவர் நீராக மாறி விடாதா?

4. விவசாயிகள் பெருமளவு இரசாயன, உரப் பசளை, கிருமிநாசினிகளை பயன்படுத்துகின்றனர். கற்றுடன் வேறுகாரணங்களால் மாசுபடுகின்றது. இதனால் ரசாயன பதார்த்தங்கள் நிலாவரை நீரில் கலக்கின்றன. இதனால் இந் நீரைப் பருகும் மக்கள் பக்க விளைவுகளால் பாதிக்கப்படமாட்டார்களா?

5. இந்த உத்தேச திட்டத்துக்கு நீர்வளச் சபையின் நிபுணத்துவ ஆலோசனைகள் பெறப்பட்டதாகக் கூறப்படுகின்றது. ஏன் இந்த ஆலோசனைகள் பெறப்படவில்லை?

6. மேற்கூறிய காரணங்களால் 51¼ லட்சம் ரூபா செலவு செய்த பின்னர் உவர் நீராக மாறினால், பாலையாவர்களின் கதி என்னவாகும்? பொதுமக்களின் பணமும் பாழடிக்கப்பட்டதாகாதா?

இப்படி மகஜரில் சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன. (இ-ஈ)

இன்றைய நிலையில் சகலரும் முதலுதவிப் பயிற்சி பெற்றிருப்பது அவசியம்

காங்கேசன்துறை, மார்ச் 15 எல்லோரும் அதிகாரப்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய நிலையில் ஒவ்வொரு இளைஞனும் யுவதியும் முதலுதவிப் பயிற்சி பெற்றிருப்பது அதி முக்கியமானது.

மயிலிட்டி தெற்கு இளைஞர் கழக ஆதரவில் நெல்லிப்பழை தற்கை செல்வா தொடக்கநிலைப் பள்ளியில் செஞ்ஜோன்ஸ் முதலுதவிப் பயிற்சி வகுப்பு அரம்பித்து வைக்கப்பட்டது.

ஆரம்ப வைபவத்திற்கு கலந்துரை யாற்றிய தெல்லிப்பழை ப. நோ. கூ சங்கத் தலைவர் திரு. எஸ். சிவமகாராசா மேற்கண்டவாறு கூறினார்

இளைஞர் கழகத் தலைவர் திரு. தா. குகனேசன் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

மற்றும் இளைஞர் சேவை அதிகாரி திரு. எம். கார்த்திகேசு, மாவை லயன்ஸ் கழகச் செயலாளர் எம். விரகிங்கம், செஞ்ஜோன்ஸ் அம்பு லன்ஸ் சார்பில் திரு. அருந்தவராசா ஆகியோரும் உரையாற்றினர். (இ-68)

பொய்யாமொழி

குறள்:

நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு.

பொருள்:

[illegible] சேர்ந்துள்ள செல்வமானது, கற்றறிந்த நல்லவரிடம் உள்ள வறுமையைவிட [illegible] துன்பம் செய்வதாகும்.

ஜெபமும் உழைப்பும்!

"கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராது" (1 கொரி 15:58)

ஜெபம் செய்யுங்கள்; அதோடு நிறுத்தி விடாமல் பிரயாசப்படுங்கள்; உழையுங்கள்! அப்பொழுது உங்கள் ஜெபமும் முயற்சியும் மிகுந்த பலனளிக்கும்!

எங்கள் ஊர் பள்ளியின் குறிக்கோள் "ஜெபித்து, உழைத்து இன்பங்காண்" என்பது. "Pray. Work and pleasure find". இதை பள்ளிக்கூட பாட்ஜியிலும் வைகுவடி புத்தகத்திலும் எழுதியிருப்பார்கள். ஆம் ஜெபம் மட்டும் போதாது, உழைப்பும் அவசியம்.

ஒரு சோம்பேறியான பாட்டியம்மாவைக் குறித்து ஒரு கதை சொல்லுவார்கள், அவர்கள் காலையில் எழுந்ததும் காப்பி போட்டுத் தரும்படி ஆண்டவரிடம் ஜெபிப்பார்களாம். ஆண்டவரே சீக்கிரமாய் ஸ்டவ் மற்ற வையும். மேஜை அருகே மண்ணெண்ணெயிருக்கிறது. அதை ஸ்டவ்வில் ஊற்றி விடும். அந்த அலுமினிய பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றி கொதிக்கவுடன் காப்பித் தூள் போட்டு இறக்கி வைத்து விடும். நான் வந்து வெல்லம் சேர்த்துக் கொள்ளுகிறேன். இயேசுவின் மூலம் ஜெபம் கேளும் பிதாவே, ஆமென். இதுதான் அவர்கள் ஜெபம். இது கேட்கப்பட்டிருக்கும் என்று நினைக்கிறீர்களா? இல்லை!

ஜெபியுங்கள். அதோடு உழையுங்கள். மோதகர் ரிச்சர்ட் பக்ஸ்டன் சிறந்த ஜெப வீரர் மட்டுமல்ல, தினமும் அவர் வீடு வீடாகச் சென்று மாலையில் 18 மணி நேரமும் கவிசேஷத்தை அறிவித்தார். D. L. முடி என்ற பக்தனின் உழைப்பைக் குறித்து பத்திரிகை ஆசிரியர்கள் எழுதும் போது அவர் இரவும் பகலும் பிரயாசப்பட்டு உழைத்து பிரசங்கம் ஆயத்தம் செய்வார். நடந்து சென்று ஆத்துமாக்களைச் சந்திப்பார். அவர் ஒரு மோதும் சோம்பலாயிருந்ததில்லை என்று குறிப்பிடுகிறார்கள்.

ஆம்; அறுவடை மிகுதி கொஞ்சமான வேலையாட்கள் எவ்வளவு அதிகமாக உழைக்க வேண்டும்; ஜெபிக்க வேண்டும்.

"நான் நட்டேன்; அப்பொல்லோ நீர் பாய்ச்சினான் தேவனே விளையச் செய்தார்" (1 கொரி 3:6)

முஸ்லிம்களுக்கு தனிமாகாணசபை பலன் அளிக்காது

கொழும்பு, மார்ச் 15 முஸ்லிம்களுக்கு தனி மாகாணசபை கோருவது சமாதானப்பேச்சுக்களைக் குழப்பிவிடக்கூடும். எதிர்பார்க்கும் பலனையும் தராது.

இடைக்கால இஸ்லாமிய அரசியல் நடவடிக்கைக் குழு விடுத்த பத்திரிகை அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிடம் டிசம்பர் 19 யோசனைகளுக்கு பூரண ஆதரவு தெரிவிப்பதாகவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-ஈ)

ஞானக்கதிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

COMPUTER PROGRAMMING
BASIC LANGUAGE
6 Months – Weekends
Commencement 25-4-1987
Fees: Rs. 1500/-
JOIN THE LEADERS
Cantabia Institute
21, Main Street, Jaffna. Phone: 24201
13, Rasavinthodam Lane, Jaffna.

உதயன்

15. 03. 1987 ஞாயிற்றுக்கிழமை

"TOEFL"
Weekend Classes
Duration -- 2 Months
Full Fees 250/- only
Commencement; 11-04-1987
Lectures by Popular English Lecturer
Mr. Kandiah Navarendran
Cantabia Institute
21, Main Street, Jaffna, Phone: 24201
13, Rasavinthodam Lane, Jaffna.

விச்சாரம்

வாரும் முரளித் தம்பி, என்டு இரண்டு நாளாய்ப் போச்சுது போலை.

இரண்டு நாளாய் நமப் புறத்திலை சத்தம் இல்லாமல் இருக்கு. சனத்துக்குக் கொஞ்சம் மனச் சந்தோஷமாய் இருக்கும்.

ஆனால் மோட்டார் சைக்கிள் பழுதாய்ப் போய் கியர் பிடிக்க உச் சத்துக்கு எடுக்கிற வேலையிலை பொம்மர் வருகிற மாதிரி இருக்கு. அதைக் கேட்டுச் சனம் பயப்படுகுது.

அதைப்போலை 'லாண்ட் மாஸ்ரர்' பெட்ட வரயிக்கை ஹெலி மேலை கத்துமாப் போலை ஒரு சத்தம். சனம் அதைக் கேட்டுப் பயப்பிடுகுதுகள்.

சனம் பயப்படுகிறதோ இல்லையோ, உலை இராமன்னுமார் நாங்கள் நினைச்சதைச் செய்யத் தான் [illegible] பாதுகாப்பு, அமைதி, சுதந்திரம் கிடைக்கும் என்டு நவாலி அருள்நெறி மன்றம் தெரிவிச்சிருக்கு.

தங்கடை மன்றம் நவாலிப் பகுதியில் பல இடங்களில் திரைசீலைப் பிரசாரத்தலை நடத்துவதாய் அதன் பிரதிநிதி ஒருவர் சொன்னார்.

அதே மாதிரிக் கருத்துத் தெரிவித்து அவ வெட்டியில் இருந்தும் ஓர் அன்பர் கடிதம் எழுதியிருக்கிறார்.

அவர் சொல்வது இது தான்;

காலையில் குறிப்பிட்ட ஒரு மணி நேரத்திலும், மாலையில் குறிப்பிட்ட ஒரு மணி நேரத்திலும் சைவ ஆலயங்கள், தேவாலயங்களிலும் ஒரே சமயத்தில் மணி ஒலிக்கச் செய்து மக்கள் பிரார்த்தனையில் ஈடுபடுவோர் கடவுள் அனுக்கிரகம் கிடைத்து கஷ்டங்கள் நீங்க வழி பிறக்கும்.

பிரார்த்தனை மின் போவதில்லை என்பது மத நம்பிக்கை.

மின் நேரம் கழிப்பவர்கள் இதில் ஈடுபடுவது எல்லா விதத்திலும் நன்மையைத் தரும் . . .



குது.

உச்சத்திலை, அதுதான் ஆட்சியிலை உயரத்திலை இருக்கிறவை இந்தியாவுடன் மல்லுக்கட்ட நிக்கினம்.

ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுவிலை வாங்கிக் கட்டின பிறகும் வீரப் புப் பேசுகினம் பாக்க விக்கிலையே.

தெதியிலை இன்னும் பல வழிகளாலும் வாங்கிக் கட்டப் போகினம் அது தான் உந்த ஆணவத் திமிரை அரித்தும்.

* * *

கொண்டோடிக்கு வந்த இரண்டு கடிதங்கள் ஒரே விஷயத்தைச் சொல்லுவனவாக இருந்தன.

இன்டைக்குள்ள அவலமான சூழ்நிலையை உணர்ந்து ஒவ்வொரு வீட்டிலும், பொது இடங்களிலும், கோயில்களிலும் மாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரையில் உள்ள நேரத்திலை அரை மணித்தியாலமோ அல்லது ஒரு மணித்தியாலமோ பிரார்த்தனை செய்தால் பாதுகாப்பு, அமைதி, சுதந்திரம் கிடைக்கும் என்டு நவாலி அருள்நெறி மன்றம் தெரிவிச்சிருக்கு.

ஏதோ செய்யப் போகினம் என்டு ஒரு வதந்தி வந்திது. எங்கடை பெடியங்கள் வீடுவாங்களே. பள்ளிக்கூடங்களிலை விளையாட்டு மைதானங்களிலை பெரிய பெரிய மரங்களை நட்டுவிட்டாங்கள் இனி உலை கவ்வளவு லேசிலை ஹெலியிலை வந்து வளவிக்கூட மைதானங்களிலை இறங்க ஏலாது.

பெடியங்கள் என்டதும் தான் ஞாபகம் வருகுது. முந்தநாள் மைமல் நேர துண்டுப்பிரசுரவீச்சிலை "பொடியங்களே" என்டும் விளித்தெல்லே ஒரு பிரசுரம் விட்டவை

அதிலை தவிர்த்துள்ள தமிழ்ப் பிரமுகர்கள் மீது நாம் நாசக் வினையிபினம் என்டு சொல்லாமற் சொல்லிப் பயப்படுத்தி இருக்கினம்.

அது மட்டுமே, வேட்டியுடன், சாரத்துடன் போற பொதுமக்களை போராளியள் என்டு சொல்லிச் சுடுகிறதுக்கு ஒரு துண்டுப் பிரசுரத்திலை அத்தியாரம் போட்டிருக்கினம்.

அவை குடாநாட்டிலை கவரோரப் பக்கமாக மெதுவாக முன்னேறி தாக்குதல் நடத்திறது தானும் திட்டம் என்டு ஒரு கதை அடிபடுகுது.

உச்சத்திலை, அதுதான் ஆட்சியிலை உயரத்திலை இருக்கிறவை இந்தியாவுடன் மல்லுக்கட்ட நிக்கினம்.

ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுவிலை வாங்கிக் கட்டின பிறகும் வீரப் புப் பேசுகினம் பாக்க விக்கிலையே.

தெதியிலை இன்னும் பல வழிகளாலும் வாங்கிக் கட்டப் போகினம் அது தான் உந்த ஆணவத் திமிரை அரித்தும்.

* * *

கொண்டோடிக்கு வந்த இரண்டு கடிதங்கள் ஒரே விஷயத்தைச் சொல்லுவனவாக இருந்தன.

இன்டைக்குள்ள அவலமான சூழ்நிலையை உணர்ந்து ஒவ்வொரு வீட்டிலும், பொது இடங்களிலும், கோயில்களிலும் மாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரையில் உள்ள நேரத்திலை அரை மணித்தியாலமோ அல்லது ஒரு மணித்தியாலமோ பிரார்த்தனை செய்தால் பாதுகாப்பு, அமைதி, சுதந்திரம் கிடைக்கும் என்டு நவாலி அருள்நெறி மன்றம் தெரிவிச்சிருக்கு.

தங்கடை மன்றம் நவாலிப் பகுதியில் பல இடங்களில் திரைசீலைப் பிரசாரத்தலை நடத்துவதாய் அதன் பிரதிநிதி ஒருவர் சொன்னார்.

அதே மாதிரிக் கருத்துத் தெரிவித்து அவ வெட்டியில் இருந்தும் ஓர் அன்பர் கடிதம் எழுதியிருக்கிறார்.

அவர் சொல்வது இது தான்;

காலையில் குறிப்பிட்ட ஒரு மணி நேரத்திலும், மாலையில் குறிப்பிட்ட ஒரு மணி நேரத்திலும் சைவ ஆலயங்கள், தேவாலயங்களிலும் ஒரே சமயத்தில் மணி ஒலிக்கச் செய்து மக்கள் பிரார்த்தனையில் ஈடுபடுவோர் கடவுள் அனுக்கிரகம் கிடைத்து கஷ்டங்கள் நீங்க வழி பிறக்கும்.

பிரார்த்தனை மின் போவதில்லை என்பது மத நம்பிக்கை.

மின் நேரம் கழிப்பவர்கள் இதில் ஈடுபடுவது எல்லா விதத்திலும் நன்மையைத் தரும் . . .

கூட்டம்

சரசாலை இந்து இளைஞர் மன்றம் பேரயா தினந்தோறும் நடத்தி வரும் சைவ சமய பிரசாரக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை சரசாலை வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தில் நடைபெறும்.

சிவாசாரியார் திலகம் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் மன்றத்தின் காப்பாளர் டாக்டர் ச. நமசிவாயம், இளைப்பாறிய அதிபர் திரு சி. வைரவிப்பிள்ளை, இளைப்பாறிய ஆசிரியர் திரு. க. முத்துக்குமாரு ஆகியோர் உரையாற்றுவார்கள். (இ-31)

கிரிக்கெட்

யாழ்ப்பாணம் ஜொவிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவன அணியும் நேற்று பூர்வ கிரிக்கெட்போட்டி யொன்றில் இன்று மோதுகின்றன

இந்த ஆட்டம் இன்று காலை 9-00 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும் (உ-7)

காங்கேசந்துறை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

லப்பட்டதாகவும், ஐந்து பேர் காயமடைந்ததாகவும்தெரிவிக்கப்படுகிறது.

அரைமணி நேர நேரடி மோதலையடுத்து பலாலியில் இருந்து காங்கேசந்துறையை நோக்கி வந்த இரண்டு ஹெலிக் கொப்டர்கள் பாதுகாப்பளிக்க கவசவாகனங்களும், கனரக வாகனங்களும் பலாலி நோக்கிச் சென்றன.

செல்லும்போது இராணுவத்தினர் கண்டபடி சுடடதாலும், ஹெலிக் கொப்டரிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதலினாலும் ஒருவர் கயிறிழந்தார். பலர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் தனியார் வைத்தியசாலைகளிலும், தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டனர்.

கந்தையா (வயது 53) என்பவரே உயிரிழந்தவராவர்.

மீனா (வயது 38)
வெகுமார் (வயது 18)
ரகுநாதன் (வயது 43)
ஆகியோர் காயமடைந்தனர். (உ-10-119)

இந்துக் கல்லூரிகள் மோதலில் யாழ். வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச்15 மாவிப்பாய் இந்துக் கல்லூரி அணிக்கெதிரான கனேடிதபூர்வ கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றது

நேற்றுக் நேற்று முன் தினமும் யாழ் இந்துக் கல்லூரி மைதான திற் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ் இந்து அணி 153 ஒட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

எஸ் திலீபன் 31 கே பிரேம்நாத் 53 ஒட்டங்களைப் பெற்றனர்

புவனேந்திரகுமார் 25 ஒட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், கதீஸன் 66 ஒட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையு வீழ்த்தினர்

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மாவிப்பாய் இந்து அணி 74 ஒட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது

வீரசிங்கம் 28, கதீஸன் 29 ஒட்டங்களைப் பெற்றனர்.

எஸ். பி. எஸ். பிரபாகரன் 26 ஒட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும் எஸ். சுரேஸ் 6 ஒட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ் இந்து அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 147 ஒட்டங்களைப் பெற்றதும் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

எஸ், திலீபன் 17, ஸ்ரீகாந்த் 20 ஒட்டங்களையும் கே. எஸ். ரவிக்குமார் 4 சிக்ஸர்கள் அடங்கிய 40 ஒட்டங்களையும், எஸ். கரேஸ் 2 சிக்ஸர்கள் அடங்கிய 35 ஒட்டங்களையும் பெற்றனர்.

பி. குமார், லோகநாதன் ஆகியோர் முறையே 48, 54 ஒட்டங்களுக்கு தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மாவிப்பாய் இந்து அணி 66 ஒட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

மாவிப்பாய் இந்து அணி முதலில் ஒட்டங்கள் எதுவும் எடுக்காத நிலையிலேயே அடுத்தடுத்து 3 விக்கெட்டுக்களை இழந்தது குறிப்பிடத்தக்கது.

கிவானந்தன் 18 ஒட்டங்களைப் பெற்றார்

எஸ். பி. எஸ். பிரபாகரன், கே. கார்த்திகேயன் ஆகியோர் முறையே 10, 20 ஒட்டங்களுக்கு தலா 3 விக்கெட்டுக்களையும், எஸ். கே. புவனேந்திரன் 20 ஒட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். (உ-7)

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்குமிடையே நடைபெற்ற 'பொன் அணிகள் போர்' மாபெரும் கிரிக்கெட்போட்டியின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

இந்த போட்டியில் சிறந்த பந்து வீச்சாளராகத் தெரிவு செய்யப்பட்ட சென். பற்றிக்ஸ் அணி வீரர் ஓ. வி. கே. எம் செந்தூர்வாசன் சந்து வீசுவதையும் அருகில் மத்தியஸ்தர்களில் ஒருவரான திரு. சி நந்தகுமார் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம்

இந்தப் போட்டியின் சிறப்பு வீரராகவும் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் தெரிவான யாழ்ப்பாணக் கல்லூரி அணி வீரர் எஸ் ஜெயரங்கன் துடுப் பெடுத் தாடுவதையும், சிறந்த பந்து எடுப்பாளராகத் தெரிவான சென் பற்றிக்ஸ் அணி விக்கெட் பாதுகாப்பாளர் எம். பி பணன்ரர் பந்து தடுக்க ஆயத்தமாவதையும் இரண்டாவதுபடத்தில் காணலாம். (உ-7)

(படப் பிடிப்பு: சன். ஜோன்சன்.)

கொக்குவில் இந்து- மத்திய கல்லூரி

வெற்றி தோல்வியின்றி முடிவுற்ற ஆட்டம்

யாழ்ப்பாணம், மார்ச்15 கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணிக்கும் இடையே நடைபெற்ற சினேகபூர்வ கிரிக்கெட் ஆட்டம் வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது.

நேற்றும் நேற்றுமுன் தினமும் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்து ஆடிய கொக்குவில் இந்து அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 169 ஒட்டங்களைப் பெற்றிருந்தது தெரிந்ததே.

நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய கொக்குவில் அணி 174 ஒட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது

எம். குகனேந்திரன் 41 ஒட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 192 ஒட்டங்களைப் பெற்றது.

ரட்ணராஜா ஆட்டமிழக்காமல் 6 பவுண்டரிகள் ஒரு சிக்சர் உட்பட 51 ஒட்டங்களையும் எம். குகனேந்திரா 6 பவுண்டரிகள் அடங்கிய 31 ஒட்டங்களையும் சாயிக்கரந்தன் 20 ஒட்டங்களையும் விவேகானந்தன், கலாவண்ணன் ஆகியோர் தலா 18 ஒட்டங்களையும் பெற்றனர்.

ரி. கங்காதரன் 21 ஒட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் எம். கோகுலன் 46 ஒட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய கொக்குவில் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 121 ஒட்டங்களைப் பெற்றதும் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

எம் கோகுலன் 16, ரி. திருத்தணிகன் 22, வி. மதிதரன் 40 ஒட்டங்களையும் பெற்றனர்.

ரி. முரளிதரன் 30 ஒட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இரண்டு ஓவர்கள் மட்டுமே துடுப்பெடுத்தாட வேண்டிய நிலையில் மைதானத்தில் இறங்கிய மத்திய கல்லூரி அணி. 2 விக்கெட்டுக்களை இழந்து 8 ஒட்டங்களைப் பெற்றது.

முரளிதரன் ஆட்டமிழக்காமல் ஒரு சிக்சர் அடங்கிய 7 ஒட்டங்களைப் பெற்றார். (உ-7)

பாடசாலைகளின் கிரிக்கெட் மோதல்கள்

ராஜீவிடம்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமர் காந்தியின் அடிச்சுவடியில் [illegible] வெளிப்படுத்தியுள்ள [illegible] அரசாங்கத்தின் [illegible] வரலாறு [illegible] ஆலோசனைக் குழு இரண்டு தினங்கள் திரு. ராஜீவ் தலைமையில் கூடி இலங்கை விவகாரத்தை [illegible] ஆராய்ந்திருந்தது.

[illegible] பேரே திரு. [illegible] செயல் விவகார ஆலோசனைக் குழு இரண்டு தினங்கள் திரு. ராஜீவ் தலைமையில் கூடி இலங்கை விவகாரத்தை [illegible] ஆராய்ந்திருந்தது.

[illegible] ஜே. ஆருக்கு அனுப்பப் பட்டிருக்கும் விசேட செய்தி தயாரிக்கப்பட்டது.

அதனால் விசேட செய்தி முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என நம்பப்படுகிறது.

இந்திய பாகிஸ்தான் இறுதி டெஸ்ட் போட்டி 3ஆம் நாளில் முடியும்?

பெங்களூர், மார்ச்15 இந்திய – பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் பெங்களூரில் நடைபெறும் ஐந்தாவது — இறுதி – கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டம் திட்டமிட்ட 5 நாள் ஆட்டத்திற்கு முன்பதாக இன்று மூன்றும் நாளிலேயே முடிவடையும் நிலை ஏற்பட்டிருக்கிறது

இந்த ஆட்டத்தில் பந்து வீச்சாளர்களின் கை ஓங்கியிருக்க --இரண்டு நாள் ஆட்டத்தில் மொத்தம் 25 விக்கெட்டுகளை துடுப்பெடுத்தாட்ட வீரர்கள் இழந்து விட்டனர்.

இதனால் போட்டி மூன்றாம் நாள் ஆட்டத்திலேயே முடிவடையும் நிலை ஏற்பட்டிருக்கிறது

முதல்நாள் ஆட்டத்தில் இந்திய இடதுகை சுழல் பந்துவீச்சாளர், மனிந்தர் சிங்கின் பந்துகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் பாகிஸ்தான் ஆணி 116 ஒட்டங்களுக்குள் முதல் இன்னிங்ஸில் சுருண்டது

ஆனாலும் இந்தியத் துடுப்பாட்ட வீரர்களினாலும் தாக்குப்பிடிக்க முடியவில்லை. வேகச் சுழல் பந்து வீச்சாளர்களான இக்பால் காசிமும், டஸிவ் சுமட்டும் 145 ஒட்டங்களுக்குள் இந்திய அணியை முழுமூச்சாக சரித்தனர்.

இருவரும் தலா ஐந்து விக்கெட்டுகளை பகிர்ந்து கொண்டனர்.

நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் முடிந்த போது பாகிஸ்தான் அணி 5 விக்கெட்டுகளை எடுத்து 155 ஒட்டங்களைப் பெற்றிருந்தது. (உ)

ஜீ.சி.ஈ முடிவுகள் இன்று வரும்

யாழ்ப்பாணம். மார்ச்15 யாழ் மாவட்டப்பாடசாலைகளின் ஜீ.சி.ஈ. பரீட்சை முடிவுகள் யாழ் கல்விக்கந்தோருக்கு இன்று நண்பகல் கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வித்திணைக்கள உயர் அதிகாரி ஒருவரினால் அநுராதபுரத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளைக் கொண்ட பொதியில் வவுனியா மாவட்டத்திற்கான பொதி நேற்று வவுனியா கல்வித்திணைக்களத்துக்கு வழங்கப்பட்டது. (இ-10)

கச்சதீவு...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கைத்தமிழர் பிரச்சினையை ஒப்பிட்டுக் கூற முடியாது"- இப்படி டாக்டர் சுப்பிரமணிய சுவாமி கடந்த வெள்ளிக்கிழமை மதுரையில் வைத்து கைது செய்யப்பட்டார் பின்னர் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் மூலம் அவர் சென்னைக்கு அழைத்துச் செல்லப் பட்டார் என்பது தெரிந்ததே. (உ-7)

Administrative Officer — Wanted

நிர்வாக அலுவலர் தேவை

தெல்லிப்பழையில் அண்மையில் பொறுப் பேற்கப்பட்ட ஒரு வைத்திய சாலையை நிர்வகிக்க கடிய ஒரு நிர்வாக அலுவலர் தேவைப்படுகிறார்.

1. வைத்தியத்துறை / நிர்வாகத்துறை அனுபவம் பெற்றவராய் இருத்தல் வேண்டும்.
2. வைத்தியசாலைச் சுற்றுடலில் வசிப்பவராய் இருத்தல் விரும்பத் தக்கது. வைத்தியசாலை வதிவிடத்தில் வசிக்க விருப்முடையவராக இருத்தல் விரும்பத்தக்கது.
3. எதிர்பார்க்கப்படும் வேதனம் பற்றி கலந்தாலோசித்து தீர்மானிக்கப்படும்.
4. சேவை அனுபவம், நற்சான்றிதழ், மற்றும் தகைமை பற்றிய ஆவணங்களுடன் 18 - 3 - 1987 ஆம் திகதி பி. ப. 2-00 மணிக்கு தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலைக்கு நேர்முகமாக வருக தரவும்

தெல்லிப்பழை
14-3-1987.

தலைவர்
கூட்டுறவு
அபிவிருத்திச் சபை.

அறிவித்தல்

நாம் புதிய கிளை ஸ்தாபனம் ஒன்றை ஆஸ்பத்திரி வீதியிலுள்ள (Bank of Ceylon) அருகாமையில் ஆரம்பித்துள்ளோம் என்பதை எமது வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியுடன் அறிவித்துக்கொள்கிறோம்.

கண் வைத்திய நிபுணர்களினால் சிபார்சு செய்த கண்ணாடிகள் சரிவரப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரே ஸ்தாபனம்

S. M. FERNANDO
580, 1ம் மாடி, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

வடக்கின் மிகப் பிரபல்யமான
பாடசாலை கிரிக்கெட் வீரர் தெரிவு
உதயன் நிறுவனத்தின் ஆதரவோடு
1987
யாழ் ஜொ விஸ்ரார்ஸ் லியன்ஸ்
விளையாட்டுக் கழகங்கள் இணைந்து நடத்தும்
மிகப் பிரபல்யமான
கிரிக்கெட் வீரரை வாசகர்கள்
தெரிவு செய்யும் போட்டி
வீரரின் பெயர் _____
கல்லூரி _____
வாக்காளர் பெயர் _____
விலாசம் _____
ஒப்பம் _____

வடமராட்சியில் வெள்ளிவாரி பட்டப்படிப்பு

* G A Q 88 April விண்ணப்ப முடிவுத் திகதி 20-03-87.
* விண்ணப்பங்களுக்கு முந்துங்கள்.
* இன்னும் ஒன்பது விண்ணப்பங்களுக்கு மட்டும் இடமுண்டு.
தொடர்பு:- நிர்வாகி, "கெயின்ஸ்" நெல்லியடி.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மிக்சார் வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்லிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் அச்சகத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிடு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 15 - 03 - 1987 தொலைபேசி இல. 24805, 22075

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at th General Post Office. Under Number QJ / 94 /N /87. Telephone. 24805, 22075

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org